தினமலர்
TNPSC Group 4 தேர்வு

# மாதிரி வினா-விடை

WWW.TAMILMIXEREDUCATION.COM

## பொருளாதாரம்

1. பொருத்துக.

a. மலிவுப் பணம் — 1. பரந்துபட்ட பணம்
b. அருமைப் பணம் — 2. வட்டி விகிதம் குறைவாக உள்ள பணம்
c. கட்டளைப் பணம் — 3. வட்டி விகிதம் அதிகமாக உள்ள பணம்
d. M3 பணம் — 4. மத்திய அரசு அச்சிடும் பணம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

2. சரியான இணையை தேர்வு செய்க.

I. 1965 – வங்காள தேசத்தின் சுதந்திரப்போர்
II. 1962 – இந்திய – சீனப்போர்
III. 1969 – 6 வங்கிகள் தேசியமயம்
IV. 1979 – சுழல் திட்டம்

(A) I, II (B) IV மட்டும்
(C) III மட்டும் (D) II, IV

3. பொருத்துக.

a. ரூர்கெலா — 1. ஜார்காண்ட்
b. பிலாய் — 2. ஒடிசா
c. துர்காபூர் — 3. சத்தீஸ்கர்
d. பொகாரோ — 4. மேற்குவங்கம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

4. திட்டக்குழுவின் குறிக்கோள்களில் சரி எவை

I. வறுமை ஒழிப்பு
II. விவசாய உற்பத்தியை பெருக்குதல்
III. தேசிய வருமானத்தை உயர்த்துதல்
IV. மக்கள் தொகை பெருக்கத்தை ஊக்குவித்தல்

(A) I, II, IV (B) I, II, III, IV
(C) I, II, III (D) I, IV

5. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க

I. ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை, சிறு தொழில் செய்வதாகும்
II. ஒழுங்குபடுத்தப்பட்ட துறையில் அதிகமான ஊதியமும், வேலை பாதுகாப்பும் அளிக்கப்படும்

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி
(C) I, IIம் சரி (D) I, IIம் தவறு

6. கூற்றுகளில் சரி எவை

I. வேலையினால் ஏற்படும் துன்பத்தைக் கருதாமல் கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ பகுதியாகவோ உடல் அல்லது மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு என ஆடம்ஸ்மித் உழைப்பிற்கு விளக்கமளிக்கிறார்.
II. வேலைபகுப்பு முறையை ஆடம்ஸ்மித் தனது "நாடுகளின் செல்வமும்" அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் என்ற நூலின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி
(C) I, IIம் சரி (D) I, IIம் தவறு

7. மாறுபட்ட ஒன்று (மறைமுக வரி)

(A) GST (B) கேளிக்கை வரி
(C) செலவுகள் மீதான வரி
(D) விளம்பரங்கள் மீதான வரி

8. தவறான இணை எது

ஆங்கிலேய நாணயங்கள் – பெயர்கள்
(A) தங்க நாணயங்கள் – கரோலினா
(B) வெள்ளி நாணயங்கள் – டாங்கா
(C) செம்பு நாணயங்கள் – கப்ரூன்
(D) வெண்கல நாணயங்கள் – டின்னி

9. பொருத்துக.

a. பணக்கொள்கை — 1. மத்திய அரசு
b. காப்பீடு — 2. SEBI
c. நிதிக்கொள்கை — 3. RBI
d. பங்குச் சந்தை — 4. IRDA

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

10. சரியான இணை எது

பொருளாதாரக் கொள்கை — நாடுகள்
I. முதலாளித்துவம் – அமெரிக்கா, ஜெர்மன்
II. சமத்துவம் – கியூபா
III. கலப்பு பொருளாதாரம் – இங்கிலாந்து

(A) I மட்டும் (B) I, II மட்டும்
(C) I, II, III (D) எதுவுமில்லை

11. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன

(A) தங்கம் (B) வெண்கலம்
(C) வெள்ளி (D) இவை அனைத்தும்

12. பிரிக் (BRIC) என்ற சுருக்கப் பெயர் எந்த ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது.

(A) 2001 (B) 2006 (C) 2010 (D) 2009

13. 'ரூபாயின் பிரச்னை' நூலை எழுதியவர்

(A) கார்ல் மார்க்ஸ் (B) மன்மோகன் சிங்
(C) தாதாபாய் நவ்ரோஜி (D) அம்பேத்கர்

**விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. B | 2. D | 3. A | 4. C | 5. C | 6. B | 7. C |
| 8. B | 9. B | 10. C | 11. D | 12. A | 13. D | |





256 பக்கம் ரூ. 300

TNPSC Group-IV & VAO
தேர்வு வழிகாட்டி புத்தகம் பெற
1800 425 7700 ( Toll Free ) 75500 09565 ( Whatsapp ) ( காலை 7:00 - இரவு 7:00 மணி )